மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | சுந்தரராஜன் | நாள் | 24.08.2023 |
| தகப்பனார் பெயர் | அருணாச்சலம் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 குறுக்கு விசாரணை:–**

1) இவ்வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வழங்கப்படவில்லை. நீதிமன்றத்திற்கு என்னை சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தார்கள் என்றால், வழக்கறிஞர் அழைத்ததால் வந்தேன்.

2) இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் வரதராஜன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். வரதராஜன், 1ம் பிரதிவாதி மாரியம்மாள் மீதும், இதர பிரதிவாதிகள் மீதும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். என் தாயார் பெயர் கமலம் என்றால் சரிதான். என் தாயாரும், 1ம் வாதியும் உடன்பிறந்தவர்கள் என்றால், சரிதான்.

3) தாவா சொத்திற்குரிய சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால், ச.எண்.362/2, 3 ஆகியவை ஆகும். மேற்படி சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால், குட்டப்பட்டி கிராமத்தில் உள்ளது. மேற்படி ச.எண்.362/2ல் அய்யனாரப்பன் கோவில் உள்ளது என்றால், சரிதான்.

4) மேற்படி அய்யனாரப்பன் கோவில் சுமார் 300 பங்காளிகள் கொண்ட குல தெய்வ கோவில் என்றால், சரிதான். மேற்படி ச.எண்.362/2, 3 மற்றும் இதர சொத்துக்கள் குறித்தும், 1ம் பிரதிவாதி மாரியம்மாள் என் தாயார் மீதும், 1ம் வாதி மீதும், இதர குடும்ப உறுப்பினர்கள் மீதும் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.9/2013 என்ற பாகபிரிவினை வழக்கை தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

5) என் தாயார் கமலம், N பழக்காரனூர் காட்டுவளவு, நங்கவள்ளி அஞ்சல், மேட்டூர் தாலுக்கா என்ற முகவரியில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். மேற்படி அ.வ.எண்.9/2013 என்ற பாகபிரிவினை வழக்கில் என் தாயார் 20–வது பிரதிவாதியாக உள்ளார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

6) என் பிரமாண பத்திரிக்கையில் நான், 1ம் பிரதிவாதி பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என நான் சொல்லியுள்ளேன் என்றால், என் பிரமாண பத்திரிக்கையில் 6–வது பத்தியில் மேற்படி விவரங்கள் குறித்து நான் சொல்லியுள்ளது தவறானது ஆகும்.

7) 1ம் பிரதிவாதியின் தந்தை மாரிமுத்து கவுண்டருக்கு எத்தனை மனைவிகள் என்றால், மொத்தம் 3 மனைவிகள் என நான் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் 2 நபர்களை தான் நான் பார்த்துள்ளேன். மேற்படி முதல் மனைவியை பற்றிய எந்த விவரமும் எனக்கு தெரியாது. 2–வது மனைவியின் பெயர் எனக்கு தெரியாது. 3–வது மனைவியின் பெயர் பாப்பம்மாள்.

8) மேற்படி மாரிமுத்து கவுண்டருக்கு மேற்படி 3 மனைவிகள் மூலமாக பிறந்த ஆண் மற்றும் பெண் வாரிசுகள் யார் என எனக்கு தெரியுமா என்றால், 2–வது மனைவிக்கு மொத்தம் 3 பெண் மக்களும், ஒரு ஆண் மகனும் உள்ளனர். அவர்களுள் அமராவதி, அய்யமுத்து மற்றொரு பெண் குழந்தையின் பெயர் எனக்கு தெரியாது. ஆண் வாரிசின் பெயர் வைத்தியலிங்கம். 3–வது மனைவி பாப்பம்மாவிற்கு 4 ஆண் வாரிசுகளும், 3 பெண் வாரிசுகளும் உள்ளனர். அவர்களுள் ஆண் வாரிசுகளின் பெயர் அங்கமுத்து, நாராயணன், சின்னையன், விசுவன் ஆகும். பெண்கள் பெயர் கொயிலா, ஆராயி, மாரியம்மாள் ஆகியோர்கள் ஆவார்கள்.

9) மேற்படி கடைசி வாரிசு மாரியம்மாள் தான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால், சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான மாரிமுத்து கவுண்டர், 1ம் வாதிக்கு இந்த தாவா சொத்துக்கள் குறித்து கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்ததாக நான் சொல்கிறேன் என்றால், சரிதான்.

10) மேற்படி கிரயப்பத்திரத்தில் மாரியம்மாளோ அவரது சகோதரிகளும் கையெழுத்து போடவில்லை என்றால், சரிதான். என் பிரமாண பத்திரிக்கையில் பல்வேறு ஆவணங்களின் எண்களும், ஆவண தேதிகளும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவை குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா அல்லது என் வழக்கறிஞர் அறிவுரையின் பேரில் கூறியுள்ளேனா என்றால், எனக்கு அதுகுறித்து நேரடியாக தெரியும்.

11) கடந்த 28.11.1990 ம் தேதியில் ஒரு பத்திரம் எழுதியதாக நான் சொல்லிய நிலையில் மேற்படி பத்திரம் யாரால் எழுதப்பட்டது என்றால், மாரிமுத்து கவுண்டரால், வரதராஜன் பெயருக்கு எழுதப்பட்டது. அது என்ன வகையான பத்திரம் என்றால், அதுகுறித்து எனக்கு நினைவில்லை. மேற்படி பத்திரத்திலும் 1ம் பிரதிவாதி மாரியம்மாள் கையெழுத்திடவில்லை என்றால், சரிதான்.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.2 ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.